# Sub Court, Eraniel

O.S. No.142/2022
Date:23.03.2026.
PW1 - திரு.ஷாஜி மோன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தும் வேறு சில சொத்துக்களும், வறுவேல் நாடாருக்கு OS.No.423/1958 ன் தீர்ப்பு படி கிடைத்தன என்றால், சரிதான். வறுவேல் நாடார் உரிமை மாற்றம் எதுவும் செய்யாமல் இறந்து போன காரணத்தால், வழக்கு பட்டிகை சொத்து அவருடைய வாரீசுகள் 7 பேருக்கும் உரிமையாக கிடைத்தது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ன் படி அந்த சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ல் G பட்டிகை சொத்து செலின் மேரிக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த G பட்டிகை சொத்தை ஏற்றுக் கொண்டு செலின் மேரி வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த பாகத்தை ஏற்றுக் கொண்டு செலின் மேரி போக்குவரவு செய்து பட்டா பெறவில்லை என்றால், சரிதான். செலின் மேரி என்பவர் கார்மல் என்பவரின் கணவருடன் இந்த ஊரை விட்டு சென்று விட்டார் என்றாலும், திரும்பி அவர் வரவில்லை என்றாலும், சரிதான். G பட்டிகை சொத்தை பொறுத்து செலின் மேரி எந்த காலகட்டத்திலும், அனுபவ உடமையில் இருக்கவில்லை என்றால், சரிதான். செலின் மேரியின் கணவர் எப்பொழுது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. செலின் மேரியின் வாரீசு சான்றிதழ் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 G பட்டிகையில் சர்வே எண்.226/12 ல் 6.426 சென்டுகள் ஒதுக்கப்பட்டன என்றால், சரிதான். அந்த சொத்து செலின் மேரி இறந்த பிறகு, அவருடைய வாரீசுகள் அனைவருக்கும், பாத்தியப்பட்டது என்றால், சரிதான். செலின் மேரியின் வாரீசுகள் பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால், சரிதான். செலின் மேரியின் மகள் பிஜு பங்கிராஜ் தனது உரிமையை, சகோதரன் வினோத் பங்கிராஜ்க்கு எழுதிக் கொடுத்ததாக நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அவ்வாறு உரிமையை விட்டுக் கொடுத்ததாக எழுத்து பூர்வமான ஆவணங்கள் ஏதும் கிடையாது என்றால், சரிதான். வாக்கால் சொன்னது தான். வழக்கு பட்டிகை சொத்து வினோத் பங்கிராஜ், எனது தாயார் மரிய அமிர்தத்திற்கு வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தின் மூலம் கிரயம் செய்து கொடுத்தார். வா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் செலின்

மேரி கையொப்பம் செய்யாததாலும், செலின் மேரியின் வாரீசுகள் தங்களது பாகத்தை விட்டுக் கொடுத்ததாக ஆவணங்கள் இல்லாததாலும், வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி எனது தாயாருக்கு வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை ஏதும் முறையாக ஏற்படவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் எழுதிக் கொடுக்க வினோத் பங்கிராஜ்க்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் நான் வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் 9.080 சென்ட் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். ஆனால், செலின் மேரிக்கு வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் 6.426 சென்டுகள் தான் ஒதுக்கப்பட்டன என்றால், சரிதான். மீதி சுமார் 2.500 சென்ட்கள் எப்படி சேர்க்கப்பட்டது என்றால், பாகப்பிரிவினை பத்திரத்தில் 4 வது கண்டத்தை சேர்த்துக் கொண்டோம். வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் 4 வது கண்டம் எல்லா அவகாசிகளுக்கும் பொதுவான பொதுப்பாதை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ல் பொதுப்பாதை என்று சொல்லப்பட்டுள்ளது, 2 மற்றும் 3 ம் கண்டத்திற்கும் செல்லும் வழி என்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அப்படி என்றால், 1 ம் கண்ட அவகாசிக்கு பாதை ஒதுக்கப்படவில்லை என்று தான் சொல்கிறேன். வா.சா.ஆ.1 ற்கு எதிராக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அனைத்து அவகாசிகளுக்கும் பொதுவான பாதையாக 4 ம் கண்டம் வா.சா.ஆ.1 ல் ஒதுக்கப்பட்டது என்றால், சரியல்ல. அந்த பாதையை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் எனது தாயாரும் வினோத் பங்கிராஜ்–ம் இணைந்து வா.சா.ஆ.2–ஐ உருவாக்கினார்கள் என்றால், சரியல்ல.எனவே வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் நான் உரிமை எதுவும் கோர முடியாது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 பாகபத்திரத்தில் 1 ம் கண்டம் A பட்டிகை சொத்தை பங்குதாரர் ஜார்ஜ் என்பவரிடம் இருந்து பிரதிவாதிகள் கிரயம் பெற்றிருக்கிறார்கள் என்றால், சரிதான். அந்த கிரயபத்திர எண்.1693/2010 ல் ஜார்ஜ் தனது பாதை உரிமையை சேர்த்து கிரயம் கொடுத்திருக்கிறார் என்றால், சரிதான். பாதை உரிமைக்கு தனியாக பிரதிவாதிகள் முத்திரைக் கட்டணம் செலுத்தி கிரயம் வாங்கினார்கள் என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. இதே பரிகாரத்திற்காக இரணியல் உரிமையில் நீதிமன்றத்தில் OS.No.144/2012 என்ற வழக்கினை எனது சகோதரி சிந்து மேரி வாதியாக இருந்து தாக்கல் செய்தார் என்றால், சரிதான். சிந்து மேரி அந்த வழக்கில் ஆஜர் ஆக வில்லை என்றாலும், எனது தாயார் தான் அந்த வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்தினார் என்றால், சரிதான். அந்த வழக்கு 03.06.2019 ல் தள்ளுபடி செய்யப்பட்டது

என்றால், சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2013ம் ஆண்டு வா.சா.ஆ.2 தயார் செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த அசல் வழக்கு பற்றிய விபரங்களை நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான். அந்த தீர்ப்பிற்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் AS.No.58/2019 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த மேல்முறையீடு 12.03.2021ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். இந்த விபரத்தை எனது தாயார், வழக்குரையிலும், எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் ஜெயசேகரன் மற்றும் ஆன்றணி, 1ம் பிரதிவாதி ஆலயத்தின் துணைத்தலைவர் மற்றும் செயலாளர் என்றால், வழக்கு தாக்கல் செய்யும் போது அவ்வாறு பதவியில் இருந்தார்கள். அவர்களை பதவியின் அடிப்படையில் இல்லாமல், தனிப்பட்ட நிலையில் கட்சி சேர்த்ததற்கான பிரத்தியேகமான காரணம் என்ன என்றால், அவர்கள் இருவரும் மரத்திற்கு ஆசிட் ஊற்றினார்கள். வழக்கிற்காக நான் அவ்வாறு தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக தான் அவர்கள் இருவரையும் பிரதிவாதிகளாக கட்சி சேர்த்தோம் என்றால், சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் பங்கு பேரவை உறுப்பினர்தான். வழக்கு தாக்கல் செய்யும் போதும் நான் பங்கு பேரவையில் உறுப்பினர் என்றால், சரியல்ல. பங்கு பேரவை தீர்மான புத்தகத்திலும், வருகைப் பதிவேட்டிலும், நான் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால், சரிதான். பங்கு பேரவையில் 16.10.2022 ல் வழிபாதையில் இருக்கும் பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் மரங்களை வெட்டி அகற்ற சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி முடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் நான் ஒப்புதல் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது நான் அதனை மறுத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் எனது தாயார், தான் முந்தைய வழக்கில் சொன்ன சாட்சியத்திற்கு எதிராக சாட்சியம் அளிக்க இயலாது என்பதால், வேண்டுமென்றே இந்த வழக்கில் ஆஜராவதை தவிர்த்து உள்ளார் என்றால், சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால், சரியல்ல. ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் பாதையில் கல்லறை ஒன்று இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். இதற்கு முந்தைய அசல் வழக்கு மற்றும் அதன் மேல்முறையீட்டில் அந்த கல்லறை பற்றி எந்த விபரமும்

குறிப்பிடவில்லை என்றால், கல்லறை பாகப்பிரிவினைக்கு முன்பாகவே உள்ளது. அது என்னுடைய தாத்தா மனுவேலின் கல்லறை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.